
# உடன்பிறப்பே... 45

**தி.மு.க. என்பது எதிரிகளால் அழிக்கமுடியாத இரும்புக்கோட்டை. இந்தக் கோட்டையைக் கட்டியெழுப்பி, இயக்க வரலாற்றில் இடம்பிடித்த தீரர்கள் சிலரை, வாரா வாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், இந்த வாரம், பெரியார் - அண்ணா - கலைஞருடன் பயணித்து கழகம் வளர்த்த ஆர்.வி.ஜானகிராமன் அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.**




# புதுச்சேரியின் படைத்தளபதி : ஆர்.வி.ஜானகிராமன்

2019-ஆம் ஆண்டு, ஜூன் 10-ஆம் தேதி அதிகாலை, புதுச்சேரி மாநிலம் சோகத்துடன் கண் விழித்தது. அந்த மாநிலத்தின் முன்னாள் முதல்வர் 78 வயதில் வயதுமூப்பு காரணமாக உயிரிழந்த சோகம் அறிந்தனர் மக்கள். அவரது உடலுக்கு அரசு மரியாதை அளிக்கப்பட்டது. அந்த இழப்பு கழகத்தினருக்கும் பேரிழப்பு. கருப்பு சிவப்புக் கொடி அரை கம்பத்தில் பறக்க அவரது இறுதிப் பயணத்தில் கழகமே கண்கலங்கி நின்றது. கழகத்தின் தலைவர், இன்றைய முதலமைச்சர் இரங்கல் அறிக்கை வெளியிட்டார்.

"தி.மு.க.வின் போர்ப்படைத் தளபதி, தலைவர் கலைஞர் அவர்களின் சொல்லைத் தட்டாத கழகத் தொண்டர், என் மீது தனிப்பற்றும், பாசமும் வைத்திருந்த மதிப்புக்குரிய அண்ணன்" எனப் போற்றி இருந்தார். அப்படியான பெருமதிப்பு கொண்ட உடன்பிறப்புதான் ஆர்.வி.ஜானகிராமன்.

புதுச்சேரி பெயரளவில் தனிமாநிலம் என்பதால், அங்கு கழகமும் தனித்தலைமையுடன் இயங்குகிறது என அறிவோம். ஆனால், தாயைப் பிரியாத குழந்தையைப் போல தலைமைக்குக் கட்டுப்பட்டவர்கள் தலைவர்களும் தொண்டர்களும். அந்த வகையில், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் தலைமையேற்று, தனிவழி கண்டவர்கள். அதில் தனித்த அடையாளமாக நிற்பவர் ஆர்.வி.ஜானகிராமன்.

## கழகமும் பணித் தேடலும்

புதுவை மாநிலம், வில்லியனூரில் 1941-ஆம் ஆண்டு, ஜனவரி 8-ஆம் தேதி பிறந்தவர் ஜானகிராமன். தந்தை பெயர் ஆர்.வேணுகோபால், தாயார் செல்வாம்பாள். மிக எளிமையான குடும்பம் என்பதால், பள்ளிக்கல்வியை முடித்த ஜானகிராமன், வேலைக்குச் செல்லவேண்டிய நெருக்கடியில் இருந்தார். அதேநேரத்தில் பொதுவாழ்க்கையிலும் தனக்கான பாதைகளை அமைத்தவர், அந்த காலகட்டத்தில், குறிப்பாக 1960-ஆம் ஆண்டிலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பயணித்தார்.

அவரது அரசியல் தொடர்புகளும், சினிமா ஆர்வமும் அவரை 'மேகலா பிக்சர்ஸ்' நிறுவனத்தில் கொண்டு வந்து நிறுத்தியது. குறிப்பாக, கழகத்தின் முன்னோடி, கலைஞரின் மனசாட்சி 'முரசொலி' மாறன் அவர்களின் வாகன ஓட்டுநராகப் பணிக்குச் சேர்ந்தார். அவரை 'முதலாளி' என உரிமையோடு அழைக்கும் உடன்பிறப்பாக இருந்தார். 'மேகலா பிக்சர்ஸ்' நிறுவனத்தின் மேலாளர் பொறுப்பு வரை வளர்ந்தவர். கூடவே, அரசியல் கடமைகளிலும் தன்னை இடையறாது ஈடுபடுத்திக் கொண்டு, கலைஞரின் நம்பிக்கைக்குரிய தொண்டனாகத் தன்னைத் தகவமைத்துக் கொண்டார். "அண்ணன் முரசொலி மாறன் அவர்கள்தான் என் விரல்களைப் பற்றி கலைஞர் அவர்களின் திருக்கரத்தில் ஒப்படைத்தவர்" எனக் குறிப்பிட்டுள்ளார் ஜானகிராமன்.

> **"எளிமைக்கு இலக்கணம் தேடினால், திரும்பிய பக்கமெல்லாம் தெரிகிற உருவம் புதுவை ஆர்.வி.ஜானகிராமன்" என அன்று கலைஞரின் பாராட்டுரையில் இடம்பெற்றது அவரது பண்பு.**

## கார் ஓட்டிய கரங்கள்

கலைஞரைப் பற்றிய அந்தக் கரங்கள், பேரறிஞர் அண்ணாவை மருத்துவமனைக்குக் கூட்டிச் செல்ல கார் ஓட்டிச் சென்றது. அண்ணாவை அமர்த்திக் கொண்டு அவருடன் உரையாடிக் கொண்டு கார் ஓட்ட கிடைத்த வாய்ப்பு, ஜானகிராமன் வாழ்க்கையில் மறக்க முடியாத பல மாற்றங்களைக் கொண்டு வந்தது.

அந்த கார், அவருக்குப் பல திருப்புமுனைகளைத் தந்தது. ஒருமுறை முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் தமிழ்நாட்டுக்குச் சுற்றுப்பயணம் வந்தபோது, அவரது காரை ஓட்டும் வாய்ப்பினை அளித்தார் கலைஞர். ஜானகிராமன் கார் ஓட்டும் சுறுசுறுப்பை கவனித்த இந்திரா காந்தி, அந்தத் திறமையைப் பாராட்டும்விதமாக 25 ரூபாய் பரிசளித்துப் பாராட்டியுள்ளார். பல நேரங்களில் கலைஞரின் வாகனத்துக்கும் அவர் சாரதியாக இருந்துள்ளார். அது வெறும் கலையல்ல, அல்லது வேலையல்ல, கோடிக்கணக்கான மக்களின் நம்பிக்கைப் பெற்ற தலைவர் ஒருவரைப் பாது காக்கும் பணி என்று ஜானகிராமன் நம்பினார்.

## இயக்கப் பணிகள்

தலைவர்களிடம் பெற்ற நன்மதிப்புகள் மட்டுமே ஜானகிராமன் கழகத்தில் வளர்ந்து வர காரணமாக அமையவில்லை. அந்த நேரத்தில், புதுவையில் இயக்கம் கம்பீரமாக நிற்கவும், திராவிடக் கொள்கை மாநிலத்தில் எங்கும் பரவவும் பாடுபட்டவர் ஓடி ஓடி உழைத்தவர் ஜானகிராமன். அந்த உழைப்புதான் அவருக்கான இடத்தைப் படிப்படியாகப் பெற்றுத் தந்தது.

எளிமைக்கு இலக்கணமாக, தலைமையின் கட்டளையைத் தட்டாத முன்னோடியாக, கலைஞர் மீது தனிப் பாசம் கொண்ட தொண்டனாகத் திகழ்ந்த ஜானகிராமனுக்கு 1985-ஆம் ஆண்டு புதுச்சேரி சட்டமன்றத் தேர்தலில் நெல்லிக்குப்பம் தொகுதியில் கழகத்தின் வேட்பாளராகும் வாய்ப்பு வந்தது.

அப்போது வெற்றி பெற்று சட்டமன்றத்துக்குச் சென்றவருக்குக் கட்சியின் 'கொறடா' பொறுப்பு தேடி வந்தது. அதற்கு முன் கலைஞர் ஜானகிராமனிடம், "அண்ணா காலத்தில் கட்சியில் முதலில் 'கொறடா' பதவியில்தான் இருந்தேன். பின்னர்தான் பொதுப்பணித் துறை அமைச்சர், முதலமைச்சர் என உயர்வு பெற்றேன். அதனால், கொறடாவாகச் சிறப்பாகச் செயல்பட்டால், மற்றவை உனக்குத் தேடி வரும்" எனக்கூறி வாழ்த்தி அனுப்பினார். அது வாழ்த்து மட்டுமல்ல, உத்தரவாதமான சொற்கள் என காலம் நிரூபித்தது.

நெல்லித்தோப்புத் தொகுதியில் 1985-க்குப் பின்னர், 1990, 1991, 1996, 2001 எனத் தொடர்ச்சியாக ஐந்து முறை சட்டப்பேரவை உறுப்பினராகத் தேர்வாகி, மக்களின் நம்பிக்கையைப் பெற்றவராகத் திகழ்ந்தார். மக்களின் நம்பிக்கை மட்டுமா? கழகத்தின் நம்பிக்கையைப் பெற்றவராகவும் இருந்தார் என்பதற்கு அவரை அடுத்தடுத்து தேடி வந்த பதவிகளே சாட்சியாகும்.

## வாய்ப்பும் வளர்ச்சியும்

1988-ஆம் ஆண்டு புதுச்சேரி மாநிலக் கழகப் பொருளாளர், 1990-ஆம் ஆண்டு கழகத்தின் கூட்டணி ஆட்சியின் போது பொதுப்பணித்துறை அமைச்சர், 1991 ஆம் ஆண்டு புதுச்சேரி மாநிலக் கழக அமைப்பாளர் என அடுத்தடுத்த பொறுப்புகள் தேடி வந்தன. 1996-ஆம் ஆண்டு கலைஞர் சொன்னது போல, முதல் அமைச்சர் பொறுப்பில் அமர்ந்தார் ஜானகிராமன்.

மக்களுக்காகவும், அந்த மாநில முன்னேற்றத்துக்காகவும் பல ஆக்கப்பூர்வமான பணிகளை நிறைவேற்றியவர் ஜானகிராமன். புதுச்சேரியில் தனியார் மருத்துவக் கல்லூரி, தனியார் பொறியியல் கல்லூரிகள் அமைந்தது இவர் ஆட்சிக் காலத்தில்தான். அரசுக் கோப்புகளை தமிழில் தயாரிக்க உத்தரவிட்டது எனப் பல மாற்றங்களைக் கொண்டு வந்தார். ஆனால், இவை எல்லாவற்றுக்கும் முக்கியக் காரணம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அளித்த ஆலோசனைதான் எனப் பெருமையுடன் கை காட்டி நிற்பார்.

## அண்ணா விருது

தலைவர் கருணாநிதியின் சொல்லைத் தட்டாத கழகத் தொண்டராகக் கடைசி வரை விளங்கிய ஆர்.வி.ஜானகிராமனுக்கும், தலைவர் கலைஞர் அவர்களுக்கும் இடையிலான உறவு, புதுச்சேரி மக்களுக்குப் பல வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தி, மாநிலத்துக்குப் பெருமை சேர்த்த ஒப்பற்ற உறவாகத் திகழ்ந்தது.

கழகத்துக்காக அவர் ஆற்றிய தொண்டினைப் போற்றும் விதமாகவும், ஆட்சிப் பணியில் சிறப்பாகச் செயல்பட்டதைப் பாராட்டும் வகையிலும் 2005-ஆம் ஆண்டு கழகத்தின் முப்பெரும் விழாவில் உயரிய விருதான 'அண்ணா விருது' வழங்கி மரியாதை செய்தார் கலைஞர்.

"எளிமைக்கு இலக்கணம் தேடினால், திரும்பிய பக்கமெல்லாம் தெரிகிற உருவம் புதுவை ஆர்.வி.ஜானகிராமன்" என அன்று கலைஞரின் பாராட்டுரையில் இடம்பெற்றது அவரது பண்பு.

புதுச்சேரி கழகத்தின் முன்னோடியாகத் திகழ்ந்த ஜானகிராமன், கழகத்தின் உயர்நிலைச் செயல்திட்டக் குழு உறுப்பினராக இருந்தார். வயது மூப்பின் காரணமாக கழகத்தின் தீவிரப் பணிகளைக் குறைத்திருந்த நிலையில், 2019-ஆம் ஆண்டு, ஜூன் 10-ஆம் தேதி அதிகாலை இயற்கை எய்தினார். அப்போது, கழகத்தின் தலைவர், இன்றைய முதலமைச்சர் அவர்கள் "என் மீது தனிப்பற்றும், பாசமும் வைத்திருந்த அவரை இழந்து தவிக்கிறேன்" என்று கூறி, நேரில் சென்று கழகக் கொடி போர்த்தி மரியாதை செலுத்தினார்.

கழகம் வெளியிட்ட இரங்கல் செய்தியில், 'புதுவையில் கழகம் ஆட்சிப் பொறுப்பினை ஏற்கவும், கழகக் கொடி கம்பீரமாகப் பறக்கவும் உறுதியான தளம் அமைத்த போர்ப்படைத் தளபதியாகத் திகழ்ந்தவர் ஜானகிராமன்' எனப் போற்றி இருந்தது. புதுச்சேரி கழகத்தின் தொண்டர்கள் அந்தக் கொடியை உயர்த்திப் பிடிக்க, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அன்பு உடன்பிறப்பு ஆர்.வி.ஜானகிராமன் அவர்களின் உழைப்பைப் பின்பற்றுவதே கழகத்துக்குக் காலத்தால் செய்யும் தொண்டாகும்.

...துடிக்கும்

## விவசாயிகள் வீழ மாட்டார்கள்!

'விவசாயிகளின் வருவாயை இரட்டிப்பாக்குவோம்' என வாக்குறுதி அளித்து ஒன்றியத்தில் 2014-இல் ஆட்சிக்கு வந்த பாரதிய ஜனதா கட்சி, 10 ஆண்டுகளில் இன்னல்களைத்தான் இரட்டிப்பாக்கி இருக்கிறது. 2014 முதல் 2024 வரை நாடு முழுவதும் நாள் ஒன்றுக்கு சராசரியாக 27 விவசாயிகள் தற்கொலை செய்துகொண்டார்கள் எனப் புள்ளிவிவரங்கள் சொல்கின்றன.

பா.ஜ.க. ஆட்சியால் வாழ்க்கையே போராட்டமாகிவிட்ட விவசாயிகள், எம்.எஸ். சுவாமிநாதன் ஆணையம் பரிந்துரைத்த குறைந்தபட்ச ஆதார விலையைச் சட்டப்பூர்வமாக்கக் கோரி, தலைநகரில் போராட்டத்தைத் தொடங்கியிருக்கிறார்கள். அவர்கள் டெல்லிக்குள் நுழையவே முடியாதபடி செயற்கைத் தடைகளை ஏற்படுத்த முயன்று தோற்றிருக்கிறது ஒன்றிய அரசு. இப்போது, 'பெல்லட்' தோட்டாக்களால் அவர்களைச் சிதறடிக்க முயல்கிறது. 130-க்கும் மேற்பட்ட விவசாயிகள் காயமடைந்திருக்கிறார்கள். ஈவு, இரக்கமற்ற நடவடிக்கை என விமர்சனங்கள் எழுந்திருக்கின்றன.

அதுமட்டுமல்ல, 'ஆங்கிலேயர் கால சட்டங்களை நீக்கி, புதிய இந்தியா படைத்துவிட்டோம்' எனப் பேசிய பா.ஜ.க., இப்போது விவசாயிகள் போராட்டங்களை ஒடுக்குவதற்கு அதே ஆங்கிலேயர் கால சட்டங்களைப் பயன்படுத்த அனுமதி கொடுத்திருக்கிறது. இந்தியத் தந்திச் சட்டம்-1885-இன் கீழ் பாட்டியாலா, எஸ்.ஏ.எஸ்.நகர், பதிண்டா உள்ளிட்ட 20 காவல் நிலையங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் இணைய சேவையைத் துண்டிக்க அனுமதி கொடுத்திருக்கிறது ஒன்றிய அரசு.

ஆயுதங்களாலும் அடக்குமுறைச் சட்டங்களாலும் விவசாயிகளை வீழ்த்திவிட முடியாது. பெரு நிறுவனங்களின் லாபத்துக்காக ஒன்றிய அரசு திருத்தியமைத்த 3 வேளாண் சட்டங்களையும் தீரத்தோடு எதிர்த்துப் போராடித் திரும்பப் பெற வைத்ததும் இதே விவசாயிகள்தான்!

## :ப்ளாஷ்பேக்





ரஞ்சித் மணிகண்டன்

### இல்லத்தில் கொடி!

2006-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, தமிழ்நாடு முழுவதும் தேர்தல் பரப்புரையை அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்கள் மேற்கொண்டார். என்னுடைய தாத்தா குழந்தைவேல், ஒருங்கிணைந்த முதுகுளத்தூர் ஒன்றிய அவைத் தலைவராகப் பொறுப்பு வகித்தபோது தளபதி அவர்கள் தேர்தல் பரப்புரைக்கு இராமநாதபுரத்திலுள்ள உடைகுளம் கிராமத்துக்கு வருகை தந்தார். அப்போது எங்கள் இல்லத்துக்கு முன் கழகக்கொடி ஏற்றி வைத்து வாக்குச் சேகரித்துச் சென்றார். அப்படியான தருணத்தில் என் தாத்தா, தளபதிக்கு சால்வை அணிவித்து சிறப்புச் செய்தபோது எடுக்கப்பட்ட புகைப்படம் இது. இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளர் சுப.தங்கவேலன் உடனிருந்தார்கள்.

**-டி.ரஞ்சித் மணிகண்டன், தகவல் தொழில்நுட்ப அணித் தொகுதி ஒருங்கிணைப்பாளர், முதுகுளத்தூர்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### பெரியாரின் ரஷ்யப் பயணம்!

**1932-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் நாள் ரஷ்யாவுக்குச் சென்ற தந்தை பெரியார், மே 19-ஆம் தேதி வரை 95 நாட்கள் அங்கு தங்கியிருந்தார். ரஷ்யாவில் பெரியாருக்கு பல்வேறு அமைப்புகள் சிறப்பான வரவேற்பு கொடுத்தன. ரஷ்யப் புரட்சி, அதற்கான காரணங்கள், புரட்சிக்குப் பின் ஏற்பட்ட பொருளாதார சமூக மாற்றங்கள் உள்ளிட்ட விவரங்களை அப்போது கேட்டுத் தெரிந்துகொண்டார். 'மே தின அணிவகுப்பு' மரியாதையை ஏற்க, ஜோசப் ஸ்டாலின் வந்தபோது, பெரியார் அவருக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 391




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.